REGD. NO. M. [illegible] ★ தனி இதழ் 1 அணா ★ [illegible] 10 [illegible] ★ [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 22உ வியாழன் (6—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 23உ வெள்ளி (7—1—55) [இதழ் 17[illegible]

14 ஆண்டுகளுக்குப் பின்னர் ரயில்வே போர்டு [illegible]

[illegible]

1940-ம் ஆண்டில் நடைபெற்ற [illegible] கலந்துகொண்டார்கள் என்ற குற்றம் [illegible] நீக்கப்பட்ட மைசூர் ரயில்வே தொழிலாளர் [illegible] பேரை 14 ஆண்டுகளுக்குப் பின்னர் ரயில்வே போர்டு [illegible] வேலைக்கு எடுத்துக்கொண்டது.

14 ஆண்டுகளுக்குப் பின்னர், [illegible] அப்துல்லா, [illegible] சென்னராஜா, சுலைமான், நாராயணசாமி, [illegible] வாளன் ஆகியோர் இன்று மீண்டும் வேலையில் சேர்ந்தனர்.

'ஜவகர்லால் நேரு ஒரு சர்வாதிகாரி'

"நான் ஒரு விஞ்ஞானி அல்ல; அவ்வுணர்வுடையவனே நான்!"

"என் உள்ளம் எப்பொழுதும் போராட்டத்திலேயே உள்ளது!"

தன்னைப் பற்றி பண்டிதர் கருத்து

"எனக்கு முதுமை கூடக்கூட, உண்மையைக் கண்டறிவதில் அதிகமான அடக்கம் ஏற்படுகிறது.

"பொருட்களை ஆராயும்காலை அதற்குரிய உள் போராட்டம் எனக்குள் நிகழ்வதோடு, என் உள்ளம் எப்பொழுதும் போராட்டத்திலேயே உள்ளது."

—இவ்வாறு, தன்னைக் குறித்து பண்டித நேரு, பரோடாவில் நடைபெற்ற இந்திய விஞ்ஞானக் காங்கிரஸ் மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"உண்மையைக் கண்டறியும் எனது முயற்சி சில வேளைகளில் என்னைத் தவறான பாதையில் செலுத்துகிறது என்பதை நான் உணருகிறேன். தான் கண்ட உண்மைதான் ஒரு பொருளின் முழு உண்மை என ஒருவரும் கற்பனை செய்து கொள்ளக் கூடாது; எந்தப் பிடிப்புக்கும் நான் கட்டுப்பட்டவன் அல்ல; என்னுடைய தவறுகளை ஒப்புக்கொண்டு, அவைகளைத் திருத்திக்கொள்ள எப்பொழுதும் நான் தயாராக இருக்கிறேன்.

"இத்தகைய அணுகும் போக்கு, விஞ்ஞான முறை எனக் குறிப்பிடப்படும் அணுகும் முறையை நெருங்கியுள்ள ஒன்று என நம்புகிறேன். இவ்வொரு நிலையைக் கொண்டு நோக்குங்கால், என்னை ஒரு விஞ்ஞானி என நான் கொள்ளாவிட்டாலும், ஒரு விஞ்ஞான மனப்பாங்கு கொண்டவன் என நான் என்னைக் கருதிக்கொள்கிறேன்."

★

அனாதைகளா — அவர்கள்?

"அனாதைகள்தான் நாட்டின் செல்வங்கள்; அவர்களைக் காப்பாற்றுவது அந்தந்த நாட்டின் பொறுப்பு; சமுதாயத்திலுள்ள குறைபாடுகளால்தான் நாட்டில் ஏராளமான அனாதைகள் தோன்றுகின்றனர்."

"மாதர் முன்னேற்றத்தைத் தடுக்கும் கொடிய பழக்கவழக்கங்கள் யாவற்றையும் ஒழித்துக் கட்ட வேண்டும்."

இவ்வாறு பிரதமர் நேரு ஆமதாபாத் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

மனப்பான்மை மாறுமா?

"எல்லோருக்கும் வாக்குரிமை இருந்துவிடுவது மட்டும் ஜனநாயகம் ஆகிவிடுவதாகாது; உண்மையான ஜனநாயகம் என்றால், அங்கே ஏழை—செல்வர் தன், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பேதங்களோ, பேதமனப்பான்மைகளோ இருக்கக் கூடாது; சமூக, பொருளாதார வாழ்க்கையில் எல்லா மக்களும் சரிநிகர் சமானமானவர்களாக இருக்கவேண்டும்."

இவ்வாறு ஆமதாபாத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் நேரு பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

நீதிபதிகள், சட்ட அதிகாரிகள் கைது

200 ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கம்

ஈரானில், கம்யூனிஸ்டு சார்பினர் என்று கருதப்பட்ட பல நீதிபதிகள் உட்பட 60 சட்ட அதிகாரிகளும், கல்வி இலாகாவில் 200 ஆசிரியர்களும் அண்மையில் வேலையிலிருந்து விலக்கப்பட்டு விட்டிருக்கின்றனர். இதர சர்க்கார் சிப்பந்திகளும், அவர்களது 'ராஜவிசுவாசம்' பற்றி சோதிக்கப்பட்டு வருகிறார்களாம்.

கம்யூனிஸ்டு இயக்கமான 'டூடே' கட்சியில் உறுப்பினராக இருப்போர், நாட்டுக்கும், அரசியல் சட்டத்திற்கும், இஸ்லாத்துக்கும் பாதகமாக நடப்பது இவை போன்றவைகளில் ஈடுபடுவோர் ஆகியவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று கூறும் ஒரு புதிய மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. அம்மசோதாவில் கூறியிருக்கிறபடி, கம்யூனிஸ்டுகள் சார்பில் அச்சகங்கள் நடத்துவோரும்கூட மரண தண்டனை விதிக்கப்படுவார்களாம்.

'அதற்குரிய லட்சணங்கள் அவரிடம் உள்ளன'

'மக்களாட்சிக்கு அபாயகரமானவர்'

'சிறு புரட்டில் நகரும் மக்களாட்சியை [illegible] ஒழித்துவிடுவார்'

கிருஷ்ணா நேரு ஹத்தீ சிங்கின் விளக்கம்

"ஒரு சர்வாதிகாரிக்குரிய இலட்சணங்கள் [illegible] நிரம்பப்பெற்றுள்ள ஒரு மனிதரே ஜவகர்லால் நேரு."

"அரும்பெரும் நற்பணிகளை ஆற்ற தங்களுக்கு எத்தகைய ஆற்றல் இருந்தபோதிலும், நேருவைப் [illegible] மனிதர்கள், மக்களாட்சிக்கு அபாயகரமானவர்களே[illegible]. ஜனநாயகவாதி என்றும், சமதர்மவாதி என்றும் அவர் தனக்குத்தானே கூறிக்கொள்ளுகிறார்; அவ்வாறு அவர் தன்னைக் கூறிக்கொள்ளுவதும் திரிகரண[illegible]தான் என்பதி[illegible]லும் ஐயமில்லை; இருந்தாலும், உள்ளம் [illegible] தயத்திற்கு அடிமையாகிக்கிடப்பதே என்பதை [illegible] தத்துவம் கற்றோர் அனைவரும் அறிவர்."

—இவ்வாறு, பண்டிதரின் சகோதரியான கிருஷ்ணா நேரு [illegible] அவர்கள், அமெரிக்க இதழில் [illegible] கட்டுரையில் குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும், தனது சகோதரரைக்குறித்து, அக்கட்டுரையில் தொடர்ந்து கூறியிருப்பதாவது:

"மனிதர்களுடைய விருப்பத்திற்கு உடன்படும் வகையில் தர்க்க நியாயத்தை எப்பொழுதும் உருவாக்கிக்கொள்ள இயலும். ஒரு சிறு புரட்டில், மெள்ள நகரும் மக்களாட்சிக் கோட்பாட்டை உதறித் தள்ளிவிட்டு, தன்னை ஒரு சர்வாதிகாரியாக்கிக் கொள்ள நேருவால் இயலும்."

"தன்னை ஒரு சர்வாதிகாரியாக மாற்றிக்கொள்வதற்காக நேருவிடம் உள்ள இலட்சணங்களில் [illegible] திண்மை, மற்றவர்களிடம் சகிப்புத்தன்மை [illegible], பலம் குறைந்தவர்களிடமும் [illegible] வெறுப்பு [illegible] ணங்களும் இடம் பெற்றிருக்கின்றன."

கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக!

கூட்டணி ஏற்பாட்டில் காங்கிரஸ் பெற்ற முதல் தோல்வி!

ஆந்திர மாநில சட்டசபை தேர்தலில் 167 தொகுதிகளில் 417 நபர்கள் அரசியல் கட்சிகள் தொடர்பின்றி சுயேச்சையாகப் போட்டி இடுகின்றனர். மொத்தம் உள்ள 196 இடங்களுக்கு மொத்தத்தில் 946 நபர்கள் போட்டியிடுகின்றனர்.

கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் 265, காங்கிரஸ் 154, பிரஜா சோஷலிஸ்டு 43, கிரிஷிக் லோக் கட்சி 41, பிரஜா 20, ஜனசங்கம் 6 என்ற எண்ணிக்கையில் நபர்கள் போட்டியிடுகின்றனர்.

36 தொகுதிகளில் ஒருஇடத்திற்கு 3 பேர்கள் வீதமும், 42 தொகுதிகளில் நான்கு பேர் வீதமும், 41 தொகுதிகளில் ஐந்து பேர் வீதமும், 32 தொகுதிகளில் ஆறு பேர் வீதமும், 21 தொகுதிகளில் ஏழு பேர் வீதமும், 5 தொகுதிகளில் ஒன்பது பேர் வீதமும், 8 தொகுதிகளில் 11 பேர் வீதமும் தேர்தல் போட்டி இருக்கிறது.

நீராவியல்ல பக்தி!

"கடவுள் பக்தி என்பது எஞ்சினின் நீராவி போன்றதாகும்; அந்த நீராவியைத் திறந்துவிட்டால் வீணாகச் செலவழிந்துவிடும்; பாட்டிலும், கூத்துக்களிலும் பக்தியாகிய அந்தநீராவியைக் கரைத்து வீணாக்கிவிடாமல் அதைப் பத்திரமாக இருத்தி யத்திலுள் பூட்டித்தான் வைத்திருக்க வேண்டும்."

இவ்வாறு, ஆச்சாரியா விநோபா பாவே கூறியுள்ளார்.

சென்னை அரசாங்கத்தின் பண நெருக்கடி

வரவு - செலவில் 3½-கோடி ரூபாய் துண்டு விழுமாம்!

சென்னை, ஜன. 4—

சென்னை மாநிலத்தில் நலவள் திட்டங்களை மேற்கொண்டு இருப்பதின் விளைவாக, அரசாங்கத்திற்குப் பண நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும், அதன் காரணமாக சென்னை அரசாங்கத்தின் அடுத்த ஆண்டு வரவு—செலவு திட்டத்தில் ரூ. 3½ கோடி துண்டுவிழக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், உத்தமபாளையத்தில் ஒரு பிரசவ மருத்துவப் பகுதியைத் திறந்து வைத்த சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி குறிப்பிட்டுள்ளார்.

அங்குள்ள மருத்துவ மனை சார்பில், பட்டம் பெற்ற மருத்துவர்களை நியமிக்கவேண்டுமென வேண்டிக் கொள்ளப்பட்டதற்கு, 'அக்கோரிக்கை வெற்றி பெறுவது மாவட்டக் கழகத்தின் செல்வநிலையைப் பொறுத்திருக்கிறது' என மேற்படி அமைச்சர் கூறினார்.

"மாநிலத்திலிருக்கிற பெரும்பான்மையான மாவட்டக் கழகங்களும், நகராட்சி மன்றங்களும் பண நெருக்கடியில் இருக்கின்றன. அவைகளைப் போன்றே மாநில அரசாங்கமும் கூட வறுமையில் இருக்கிறது," எனவும் அமைச்சர் ஷெட்டி அறிவித்தார்.

நில [illegible]

[illegible] மாநில பூமி [illegible] கொண்டிருந்த 8,500 [illegible] அவருக்குச் சொந்தமானவை [illegible] மைசூர் [illegible] குதிரைப் படைகளுக்குப் [illegible] மைசூர் [illegible] கொண்டிருந்த [illegible] மீது 'பட்டா உரிமை' [illegible] இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மனக்குமுறல்!

"மேற்கு [illegible] பிறகு, பார்லிமென்ட் [illegible] ஆப்பிரிக்க [illegible] குமுறுகிறது." இவ்வாறு, [illegible] ஆப்பிரிக்க [illegible] பார்லிமென்ட் [illegible] எழுதியுள்ளது.

கைத்தறியாளர் வாழ வசதி செய்[illegible]

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்.அண்ணாதுரை

சென்னை 6—1—1955 வியாழன்

‘ஆரிய மத உபாக்யானம்’

இப்பெயரில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில், தமிழ் இரண்டாவது பாட வரிசை நூலாக வைக்கப் பட்டிருந்தது. அதே காலத்தில் காலஞ்சென்ற தமிழ்ப் பெரும் புலவர் கா. நமசிவாயனூர் அவர்கள் தீட்டிய ‘திராவிட வாசகம்’ துவக்கப் பள்ளிகளிலும், இடைநிலைப் பள்ளிகளிலும் பாடப் புத்தகங்களாக இருந்து வந்தன. நீதி கட்சியின் மூலக் கோட்பாடுகள் தலைதூக்கத் தூக்க, இரு வகை பெயர்களையும் தாங்கி கல்விக்கூடங்களில் குடிப் புகுந்திருந்த நூற்கள், முறையே செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ், குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் ஆகிய இரு நூல் வெளியிடும் நூலகங்களையும், கல்லறைகளாகக் கொண்டுவிட்டன. நமது பள்ளிக்கூடங்களை விட்டு, அந்த இருவகை நூற்களும் மறைந்து ஒழிந்துவிட்டதோடு மட்டுமல்லாமல், தமிழ் மக்களுக்கு விரும்பிய காலத்தில் படிக்கும் சாதாரண நூற்களாகக்கூட அவைகள் கிடைப்பது அரிதாகி விட்டன.

திராவிடர் - ஆரியர் என்ற பெயர்களில் வழங்கிய தமிழ் நூற்கள் காலவேகத்தாலோ, கருத்து மாறுபாட்டாலோ தம் கையறு நிலையைப் பெற்றுவிடவில்லை. அக்காலத்தில் சென்னை அரசாங்கத்தின் துறைகள் அனைத்திலும், ஈடும் எடுப்புமற்ற செல்வாக்குப் பெற்றிருந்த அந்த சிறு கூட்டம், வரவிருக்கும் பயங்கர எதிர்காலத்தின் தாக்குதலிலிருந்து தம் சிறு கூட்டத்தைக் காக்கும் கருத்துடன், கட்டுப்பாடாக அந்த நூற்களைப் பள்ளிகளில் இருந்து விரட்டியடித்தது. இந்த அளவில் மனச்சாந்தி ஏற்படாததால், அந்நூற்கள் ஏற்றுக்கொண்டிருந்த இரு பெயர்களும், அதாவது, ஆரிய—திராவிட எனும் இரு பெயர்களும், தமிழ் நாட்டு மக்கள் கண்களில் என்றென்றும் பட்டுவிடாவண்ணம், அச்சிறு நூற்களை ஒளித்து வைத்துவிட்டது அச்சிறு கூட்டம். அச்செயலால், அச்சிறு கூட்டத்தின் சிறுமதி, அழுக்காறு, மறம், பேராவா, கரவு ஆகியவைதான் வெளிப்பட்டனவே அல்லாது, அக்கூட்டம் விரும்பியபடி, திராவிட—ஆரிய உண்மைகள் மீண்டும் உலக ஒளி காணாமல் மறைந்து ஒழிந்துவிடவில்லை.

திராவிட நாகரிகத்தின் அடிப்படையாக உள்ள மனித உணர்வு பொதுமை மரபையும், ஆரிய நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்திருக்கும் மிருக உணர்வு வேற்றுமை மரபையும், உலக மக்கள் உள்ளவாறு கற்றுணர்ந்து கொள்வதற்கு இடமிருத்தல் கூடாது எனும் இழிகுணத்தால், முற்கால வரலாற்றுச் சுவடிகளை வேண்டுமென்றே சீரழித்து, ‘செல்வரித்துப் போயின சில-கடல் கொண்டு போயின சில’ என அச்சிறு கூட்டம், அன்றும் செப்பித் திரிந்தது—இன்றும் குளறிவழிந்த வண்ணம் உள்ளது. அப்படி இருந்தும் திராவிட நாகரிகத்தின் தொன்மையும், சிறப்பும், ஒளிவிட்டு இளமை முறுக்குடன் உலாவிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் ஆரிய நாகரீகத்தின் உண்மை உருவை மறைத்து, அதை எவ்வளவு உயரத்திற்கு ஏற்றிப் பேசின போதிலும், அப்படி உயர்த்திப் பாட்டிசைக்கிறவர்கள் எவ்வளவு உயர்ந்த இடத்தில் இருக்கிறவர்களாக இருந்த போதிலும், தங்களையும் அறியாமல், ஆரிய நாகரீகத்தின் அடிப்படை மிருக உணர்வை, அவர்கள் தினம் தினம் அம்பலப் படுத்தியே வருகிறார்கள். புனுகு பூசி மெருகினாலும், புழுத்த பிணம் துர்நாற்றம் வீசுவதைத் தவிர்த்துவிடுமோ? நிற்க,

கல்வி பொதுவென்பது, திராவிட நாகரீகத்தின் அடிப்படையான பொதுமை மனித உணர்வு. ஆனால், ஆரிய நாகரீகத்தின் அடிப்படை மிருக உணர்வோ, அதற்கு மாறாக, கல்வி குறிப்பிட்ட ஒரு சிறு கூட்டத்திற்கே பிறப்புரிமை என்பதாகும்.

அலையும் சிந்தனையைக் கட்டுப்படுத்தி, குறிப்பிட்ட ஒன்றின் மீதே நிலைநிறுத்தும் முயற்சி, மனித குலத்தின் பொதுச் சொத்து. இதில் ஜாதியோ, சமயமோ, அரசாங்கமோ, கயவர்களோ குறுக்கிடுவதற்கு எள்ளத்தனை நியாயமும் கிடையாது. மனிதராகப் பிறந்தஅனைவருக்கும் இருக்கும் இப்பொது உரிமையை திராவிட நாகரீக அடிப்படை ஒப்புக் கொள்ளுகிறது. ஆனால் ஆரிய அடிப்படையோ, இப்பொது உரிமையை, குறிப்பிட்ட ஒரு குலத்தவருக்கே சொந்தம் என்கிறது! சொந்தம் பாராட்டுவதோடும் நில்லாமல், பிற குலத்தவர், அவ்வழியைப் பின்பற்ற முன்வந்தால், அவர்களை அரசன் அழித்துவிட வேண்டும் எனவும் ஆரிய ‘அற நூல்’ கட்டளை இடுகிறது!

‘ஆண்டவன் அருள் வேட்டலில்’ அனைத்தையும் மறந்து ஈடுபட்டிருந்த உயர் குடித் தோன்று உத்தமன் சம்பூகன், பிறந்த குலத் தொழிலை விட்டு வேறு குலத் தொழிலை மேற்கொள்வது ‘பெருங் குற்றம்’ என ‘ஆரிய அற நூல்’ கூறிட, ‘குல அறம்’ குலைந்ததால் பார்ப்பனக் குடிமகன் ஒருவன் இறந்துபட்டான் என அவன் உறவினர் முறையிட, அப்புகலை மெய்யெனக் கொண்டு, ‘தவ நிலை’யிலிருந்த உத்தமன் சம்பூகனின் தலையை, அவன் உடலைவிட்டுத் துண்டித்துவிட்டான் அயோத்தி இராமன். இதன் பலனாக, இறந்த குழந்தை எழுந்தது—ஆரிய தர்மம் நிலைநாட்டப்பட்டது! இச்சம்பவத்தைக் கூறுவது இராமாயணம்!

இச்சம்பவத்தை இடைச் செருகல் என்பர், கடைந்தெடுத்த எத்தர்கள்!

ஆரிய குலதர்மத்தைப் புறக்கணித்து நடந்ததற்காக உத்தமன் சம்பூகன் தனது உயிரை விலையாகக் கொடுத்தான். அதே குலதர்மத்தை மீறி நடந்த ‘மாபாதகத்திற்காக’ வில் வீரன் ஏகலைவன், குரு கெடுமதி கொண்டு கேட்க, தனது வலதுகைப் பெருவிரலை குரு காணிக்கையாகக் கொடுத்தான் மனமுவந்து!

ஆரிய குலதர்மத்தில் வழுவினதற்காக ஒருவன் உயிரையும், மற்றொருவன் பிழைக்கும் வகையையும் விலையாகக் கொடுத்துள்ளனர்!

விடுபட வேண்டும் என்ற உணர்வு, மனித குலத்திற்கு மட்டுமல்ல, வனவிலங்குகளுக்கும் உண்டு. எறும்பு முதல் யானை ஈறாக உள்ள உயிர்ப் பிராணிகளின் நடைமுறைகளை கூர்ந்து நோக்கும் குணம் பெற்றுள்ளோர் அறிவர், அவைகளிடம் இயல்பாக இயங்கும் விடுதலை வேட்கையை. ஆரிய தர்மத்தின் அடிப்படை, மேற்குறிப்பிட்ட இந்த உயர்ந் மிருக இயல்பையும் மறுக்குமொன்றாகும். ஆதலால், ஆரிய மத சாரம் மிருக உணர்வு கொண்டதெனக் கூறுவதுகூட அதன் உண்மை நிலையை உள்ளது உள்ளவாறு விளக்குவதாக இல்லை. எனவே, ஆரிய நாகரீக அடிப்படை உயிர் வாழ்வதற்காக, தம்மிலும் ஆற்றல் குறைந்த சிற்றுயிர்களை சித்திரவதை செய்து கொன்றுண்ணும் கொடிய ‘வயிற்றுணர்வு’ முனைப்பில் எழுந்த ஒன்றாகும் எனக்கொள்வதே பொருத்தமுடையதாகும். ஆரிய நாகரீகத்தின் இவ்வடிப்படை ‘வயிற்று உணர்வு’ உள்ளது சிறந்து வளம் பெற்றுவரும் நவீன ‘மனித உணர்வு’டன் ஒன்றுபடுவது ஒருக்காலும் முடியாது. முடியாது என்ற இவ்வுண்மையை, இங்குள்ள விஞ்ஞானிகளில் சிலர் வெளிப்படையாகக் காட்டி வருகின்றனர். ‘தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்ற மூதுரை, இவ்விஞ்ஞானிகள் வகையிலும் மெய்யாக இருக்கிறது. இதுதான் ஆரிய மத உபாக்யானம்.

சவ்வரிசி தொழிலாளர் வருங்காலம்

அமைச்சரிடம் கோரிக்கை

சென்னை, ஜன. 4—

சவ்வரிசி உற்பத்தியாளரும், உற்பத்தி இலாகா தலைமை அதிகாரிகளும் அடங்கிய சவ்வரிசி உற்பத்தி அபிவிருத்திக் குழு ஒன்றை அமைக்குமாறு கேட்டுக்கொண்டு சேலம் சவ்வரிசி உற்பத்தியாளர் சங்கச் செயலாளர் என். ஜெகன்னாதன் சென்னை விவசாய மந்திரியிடம் மகஜர் ஒன்றைத் தந்துள்ளார் என்று தெரிகிறது.

சவ்வரிசி உற்பத்தித் தொழிலில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருப்பதாகவும், அத்தொழிலின் அபிவிருத்தியைப் பொறுத்துத்தான் அத்தொழிலாளரின், வாழ்க்கை நிலையும் அமைந்துள்ளது என்றும் அம்மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சென்னையிலிருந்து மேற்கு வங்கத்துக்கு அனுப்பப்பட்ட 8,000 சவ்வரிசி மூட்டைகளையும் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனவும், அந்த சவ்வரிசி, நல்ல ‘தரமா’னவைகள் என்று வைத்திய நிபுணர்கள் பலரும் உறுதிப்படுத்தியிருப்பதால், அந்த சவ்வரிசி விநியோகம் செய்யப்படுவதை அங்கீகரிக்க முன்னர் வெளியிட்ட அறிக்கையைத் திருத்தும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிற மதக் கருத்துக்களையும் இந்து மத நாகரீகம் கொண்டுள்ளதாம்

மராத்திய சமூக சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கை நமக்கு வழிகாட்டும்

நீதிபதி காட்கர் கருத்து

“இந்து நாகரிகம் எப்போதுமே முற்போக்கானது; அது, காலமாற்றத்தால் ஏற்படுகிற பழக்கங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஒப்ப எப்பொழுதும் தன்னை திருத்திக் கொள்கிறது. இதை மக்கள் உணருமாறு நாம் செய்தால், சமுதாய சீர்திருத்தம் வெகுவாக வரவேற்கப்படும்,” என்று, பம்பாய் நீதிபதி பி. பி. கஜேந்திர காட்கர் மராத்திய சமுதாய மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சீரிய கருத்துக்களடங்கிய பகுதி முன்பே வெளியிடப் பெற்றுள்ளது. இதர பகுதிகளின் சாரம் தொடர்ந்து தரப்படுகிறது:—

“உபநிடதக் கால முடிவின் போது, உற்சாகமற்ற, குருட்டுத்தனமான உற்சவங்களை நடத்தும் பழக்கத்தினாலும், இந்து நாகரீகம் புதைகுழிக்குச் செல்லும் நிலையிலிருந்தது. அன்று ஏற்பட்ட பெரும் புரட்சிகளையும் அது எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

இந்து நாகரீகம் எதற்காக நிலை நின்றதோ அந்த சமுதாய அநீதியை எதிர்த்து, புத்த, ஜைன மதங்கள் பிரச்சாரம் செய்தன.

600-ஆண்டுகளுக்குப் பிறகு கர்நாடகப் பகுதியில் பாசவா என்பவர் தனது கருத்துக்களை பிரச்சாரம் செய்தார். புத்த, ஜைன மதத்தினரும், பாசவாவும் அந்தப் பகுதி மக்களின் மொழிகளில் தங்கள் எண்ணங்களைப் பரப்பினர்; அதனால் மீண்டும் இந்துமதம் தலைதூக்க முடிந்தது; பகவத்கீதை தோன்றியது; சங்கராச்சாரியின் உபதேசங்கள் கிடைத்தன.

இந்து மதம், புதிய மதங்களின் அச்சுறுத்தலை எதிர்த்துப் போரிட்டிருந்தாலும், அப்புதிய மதங்களிலிருந்து கருத்துக்களை எடுத்துக் கொண்டிருக்கிறது,” என்று அவர் குறிப்பிட்டுவிட்டு மராத்தியத்தின் பிரபல சமூக சேவகர்களைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது:—

“மராத்தியத்தில் சமூக சீர்திருத்தவாதிகள் ஐவர் மிகச் சிறந்தவர்கள். தனக்கு ஏற்பட்ட இழிவுகளையும், இழைக்கப்பட்ட கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு ஜோதிப்பூலு என்பவர் தன்னையே தீண்டாமை ஒழிப்புக்கு அர்ப்பணித்தார்.

பின், லோகாகிதவாதி என்பவர் இருந்தார். சமூக—பொருளாதார—அரசியல் விஷயங்கள் குறித்து அவர் எழுதியவற்றை இன்றுகூடப் படித்துப் பயன்பெறலாம். அன்று லோகாகிதவாதி, தீர்க்க தரிசனக் கண்ணோட்டத்துடன், ‘பிரிட்டிஷார் இப்படித்தான் வெளியேறுவர்,’ என்று நிர்ணயித்து எழுதியிருக்கிறார்.

அவர், சுதந்திர இந்தியா சமாளிக்க வேண்டியிருக்கிற பல பிரச்சினைகள் குறித்தும், அன்று, விரிவானதொரு படப்பிடிப்புத் தந்திருந்தார்.

மேலும், நாம் எல்லோரும் காலஞ்சென்ற ரானடேவுக்கு மிகக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவின் சமூக—பொருளாதார — விஞ்ஞான — அரசியல் ஆகிய எந்தத் துறையிலும் இன்றுள்ள முற்போக்கு இயக்கங்கள், ரானடேயின் பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும் தாங்கள் பெற்ற ஆர்வத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன.

அடுத்து, அகார்கர் என்பவர், மராத்தியத்தில் மறக்கப்பட்டுவிட்ட செல்வங்களுள் ஒருவராகும்.

‘அரசியல் விடுதலைக்கு எவ்வளவு உறுதிவாய்ந்த இயக்கம் தேவையோ அவ்வளவு உறுதிமிக்க இயக்கம் சமுதாயப் புரட்சிக்கும் தேவை,’ என்று அவர் நம்பினார்.

மற்றும், சர்மவீர் ஷிந்தே என்பவர், தீண்டாமை ஒழிப்புக்காக தன்னையே தியாகம் செய்தார். அவருடைய வாழ்க்கையே, இன்னும் நாம் வெற்றி பெறுதிருக்கிற ஒரு லட்சியத்தைப் பற்றிய இதிகாசமாகவே அமைந்திருக்கிறது எனலாம்.”

“அந்த சமுதாயப் புரட்சி வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் எழுத்தோவியங்களையும், மக்கள் உணர்ச்சி பெறுவதற்காகப் படிக்க வேண்டும். அப்போது, இன்று சமுதாயத்தைப் புதுப்பிப்பதற்கு நாமே திட்டம் வகுத்துக்கொள்ள அது உதவும்,”

71,500 பேர்களுக்கு ஊதிய உயர்வு

திரு—கொச்சி மாநிலத்திலுள்ள சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியருக்கு அதிகப்படியான சம்பள உயர்வு விகிதத்தை பட்டம் தாணு மந்திரி சபை அறிவித்திருக்கிறது. இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் முதல் குறிப்பிடப்பட்ட விகிதப்படி அவர்களுக்குச் சம்பளம் தரப்படுமாம். இதனால் மாநிலமெங்கும் சுமார், 71,500 பேர் பலனடைவர் என்றும், சர்க்காருக்கு ரூ. 40 லட்சம் அதிகம் செலவாகுமென்றும் கூறப்படுகிறது.

தொழில் திறமைக்கு அதிக சம்பளம்

பட்டதாரிகளுக்குக் குறைவு

பாட்டியாலா, ஜன. 4—

பெப்சுவில் பட்டதாரிகளுக்குக் கிடைக்கும் ஊதியத்தைவிட திறமையான உழைப்பாளிகளுக்கு அதிக சம்பளம் கிடைக்கிறதாம். இம்மாதிரி அதிகச் சம்பளம் தருவதை சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கிறது.

திறமைசாலிகளான தொழிலாளர்களுக்கு மாதம் ரூ 85 சம்பளம் என்று குறைந்தபட்சம் நிர்ணயிக்கப்பட்டதாம். அதுபோல் பட்டதாரிகளான -கிளார்க்குகளுக்கு ரூ. 75 என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிறதாம்.

சாலை அமைப்பதில் ஊழியம் செய்வோர், தண்ணீர் எடுப்போர், தச்சு வேலை செய்வோர் ஆகிய தொழிலாளர்களைவிட எண்ணெய் மில்களில் வேலை செய்யும் கிளார்க்குகள் குறைந்த சம்பளம் பெறுவர்

‘ஏழ்மையே இந்தியாவின் எதிரி’

‘கம்யூனிசமல்ல’ என்கிறார் வினோபா பாவே

“இந்தியாவின் உண்மையான எதிரி ஏழ்மையே தவிர, கம்யூனிசமல்ல,” என்று, பங்குராவில், கூட்டமொன்றில் பேசுகையில் ஆச்சாரியா வினோபாபாவே கூறியிருக்கிறார்.

‘நாட்டில், ஏழ்மை மிகப் பெரும் அளவில் உள்ளது; அதை நீக்க உடனடியாக முற்படவேண்டும். சில நேரங்களில் நான் ஒரு எரிமலை மீதமர்ந்திருப்பதாக உணர்கிறேன்; எந்த நேரத்திலும் எரிமலை வெடிக்கும் என்று அஞ்சுகிறேன்,” என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பிரான்சுக்கு டுனீஷியத் தலைவரின் எச்சரிக்கை!

'வாக்குறுதியை நிறைவேற்ருவிடில் மீண்டும் தொல்லை ஏற்படும்'

டுனீஷியாவுக்கு சுதந்திரம் அளிப்பதாக பிரெஞ்சு சர்க்கார் அளித்திருக்கும் வாக்குறுதிகள் மிகவும் தாமதமாகவே நிறைவேற்றப்படுகின்றன; கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பிரான்ஸ் வீண்காலதாமதம் செய்கிறது என்ருல், டுனீஷியாவில் மீண்டும் தொல்லைகள் உருவாகும் என்றும் டுனீஷிய தேசீயக் கட்சியின் பொதுச் செயலாளர் சலாஹ்பென் யூசப் எச்சரித்திருக்கிருர்.

"சென்ற ஐந்து மாதங்களாக பிரான்ஸ் தனது வாக்குறுதிகளுக்கு மதிப்பளிக்கவில்லை. அவர்கள் தந்த வாக்குறுதிகளின் காரணமாகவே டுனீஷியப் புரட்சிக்காரர்கள் தங்கள் எதிர்ப்பை நிறுத்தியிருக்கின்றனர். நிலைமையில் மாற்றமில்லை என்ருல், டுனீஷியாவில் ஏற்படப்போகும் விளைவுகளுக்கெல்லாம் பிரெஞ்சு சர்க்கார்தான் பொறுப்பு ஏற்கவேண்டும்,"

என்று, அவர் மேலும் கூறினுர்.

"சுதந்திரம் அளிக்கக் காலத்தை நிர்ணயிப்பது, பொது அமைதி, டுனீஷிய நீதிமன்றங்களுக்கு மீண்டும் அதிகாரம் அளிப்பது, வெளியார் பொருளாதார உதவியை ஏற்பது, கல்வி ஆகியவை பற்றி பிரெஞ்சு சர்க்கார் டுனீஷியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட்டது," என்றும் சலாஹ்பென் யூசப் குற்றம் சாட்டியுள்ளார்.

'விவாதிப்பேன் - விலகுவேன்!'

தாம் கூறுகிற கொள்கைகளைத் தையும் பாகிஸ்தான் சர்க்கார் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பாக். மந்திரி சபையிலிருந்து தாம் விலகி விடப் போவதாக பாகிஸ்தான் சட்ட மந்திரியான சுகரவர்த்தி கூறியிருக்கிருர்.

தமது கொள்கைகள் பற்றி, பாகிஸ்தான் பிரதமருடனும், கவர்னர்-ஜெனரலுடனும் விவாதிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

கைத்தறி: கனுங்கோ குழு அறிக்கை

தஞ்சை கைத்தறியாளர் கண்டனம்

தஞ்சை, ஜன. 1—

கனுங்கோ குழு அறிக்கையை இச்சங்கம் கண்டிக்கிறது. விசைத்தறி அபிவிருத்தி மூலம், நாட்டின் பழைய கைத்தறி நெசவுத் தொழில் நசித்துவிட அடிகோலாமல் உண்மையான கைத்தறி நெசவை ஆதரித்து அதன் வளர்ச்சிக்கு திட்டமிட சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது என்று தஞ்சை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் அதன் தலைவர் டி. என். சுந்தரராமன் தலைமையில் கூடி, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குரங்குகளின் இரங்கத்தக்க மரணம்

சென்ற வார இறுதியில், லண்டன் விமான நிலைத்தில், லாரி ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த 450 குரங்குகளில் 390 குரங்குகள் இறந்து கிடந்தனவாம்.

இந்தியாவிலிருந்து நியூயார்க்குக்கு அனுப்பப்பட்ட 1,600 குரங்குகளை, பல மூடிய லாரிகளில் போட்டு, லண்டன் விமான நிலையத்தில் வைத்திருந்தார்களாம். காற்றுப் புக முடியாமல் அந்த லாரிகள் மூடப்பட்டிருந்தமையால் மூச்சுத் திணறி அவைகள் இறந்திருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

மாநில அரசாங்கமே செய்ய வேண்டுமாம்!

விவசாயப் பண்டங்களைக் கிடங்குகளில் சேமித்து வைப்பது, அவற்றைப் பக்குவப்படுத்துவது—விற்பனை செய்தல், விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்தல் ஆகியவைகளில், மாநில அரசாங்கங்கள்தான் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இங்கு நடைபெற்ற அகில இந்திய மாதர் மத்திய உணவுக் குழுவின் மாநாட்டின்போது, மத்திய உணவு, விவசாய அமைச்சர் கூறியிருக்கிருர்.

மேலும் அவர், இவ்வாண்டில் அரிசி இறக்குமதி செய்யும் நோக்கம் இல்லையென்றும் அம்மாநாட்டின்போது தெரிவித்துவிட்டிருக்கிருர்.

உருக்குத் தொழிற்சாலை

இந்திய அரசாங்கத்துடன் பிரிட்டிஷ் கம்பெனி பேச்சு

இந்தியாவில் புதிய ஒரு எஃகு ஆலை நிறுவ 450 லட்சம் ஸ்டர்லிங் பெறுமான 'காண்டிராக்'டைப் பெற பிரிட்டிஷ் எஞ்சினீயரிங் நிறுவனம் ஒன்று முயற்சிப்பதாயும், இந்த நிறுவனத்தின் சார்பில் பிரதிநிதியாக ஒருவர் இந்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தைகள் நடத்த ஏற்கனவே இந்தியா வந்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

முதன் முதலில், இத்தொழிற்சாலையை பிர்லாவும், பிரிட்டிஷ் கம்பெனியும் சேர்ந்து நிறுவுவதென்றுதான் முடிவெடுக்கப்பட்டிருந்தது. பின்னர், புதிய எஃகுத் தொழிற்சாலையை சர்க்காரே அமைப்பதுதான் நல்லது என்று இந்திய சர்க்கார் முடிவு கட்டியதின் காரணமாக, அத்தொழிற்சாலையை நிறுவ இந்திய சர்க்காரும் முன்வந்திருக்கிறது.

இத்தொழிற்சாலைக்கு அவசியமான இயந்திரங்களைக் கடனுகக் கொடுக்கவும், தொழில் நுணுக்க உதவி அளிக்கவும் அந்த பிரிட்டிஷ் நிறுவனம் முன்வந்திருப்பதாகவும், அந்தக் கம்பெனியின் ஊக்கத்தைப் பொறுத்து, மூலதனம் போடுவதிலும் அது பங்கு கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

கவிஞருக்குக் கிடைத்த பெருமை!

நேபாள மக்களின் புதுமையான பாராட்டு

காட்மண்டு, ஜன. 4—

நேபாள நாட்டின் கவிஞர்களில் தலைசிறந்தவரான லேக்னுத் என்பவரின் பெருமையைப் பாராட்ட விழா ஒன்று நடத்தப்பட்டது. 71 வயதான இவருடைய பிறந்த நாள் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கவிஞர் லேக்னுத், ரதம் ஒன்றில் அமர்ந்து, காட்மண்டு நகரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த ரதத்தை நேபாள பிரதமர் கொய்ராலா, நேபாள மந்திரிகள், நேபாள சட்டசபைத் தலைவர் ஆகியோர் இழுத்துச் சென்ருர்கள். இவர்களுடன் நேபாள நாட்டு கவிஞர்கள், எழுத்தாளர்கள், தலைவர்கள் ஆகியவர்கள் 71 பேர் அந்த ரதத்தை இழுத்துச் சென்ருர்கள்.

தெருக்களின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கான மக்களும் குழந்தைகளும், அழகிய உடை உடுத்தி தங்கள் நாட்டு கவிஞர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும் காட்சியைக் கண்டார்களாம்.

ஊர்வலத்தின் முன் 12 பெண்கள் குதிரை மீதமர்ந்து ஊர்வலத்தை நடத்திச் சென்ருர்களாம்.

ஒரு கவிஞரது வாழ்நாளில் இதுபோன்ற பாராட்டு கிடைப்பது உலகில் மிகவும் அருமையான நிகழ்ச்சி என்று சொல்லப்படுகிறது.

தென்னுப்பிரிக்க இந்தியத் தலைவருக்குத் தடை!

பொது பதவிகள் வகிக்கக்கூடாதென உத்தரவு

ஜோகனஸ்பெர்க், ஜன. 4—

தென்னுப்பிரிக்காவின் இந்தியத் தலைவர்களில் முக்கியமானவரான யூசப் கச்சாலியா என்பவர் எந்தப் பொதுப் பதவியிலும் இருப்பது கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடை உத்தரவை தென்னுப்பிரிக்க நீதி இலாகா அமைச்சர் பிறப்பித்திருக்கிருர்.

யூசப் கச்சாலியா, தென் இந்தியக் காங்கிரசின் கூட்டுக் காரியதரிசியாகவும், டிரான்ஸ்வால் இந்தியக் காங்கிரசின் உபதலைவராகவும், தேசிய நடவடிக்கைக் கவுன்சிலின் கூட்டுக் காரியதரிசியாகவும் பணியாற்றி வருகிருர்.

தடை உத்தரவினுல், யூசப் கச்சாலியா, மேற்கண்ட இயக்கங்களில் பங்கு கொள்ள இயலாது என்றும், சர்க்கார் கொடுத்துள்ள பட்டியலில் காணப்படும் இதர 40 இயக்கங்களிலும் அவர் கலந்து கொள்ள முடியாதெனவும் கூறப்படுகிறது.

நாகர்கோவில் நகர சபை

சர்க்கார் மேற்கொள்ளுமா?

திரு — தமிழகத்தின் முக்கிய நகரங்களுள் ஒன்ருன நாகர்கோவிலின் நகர சபை நிர்வாகத்தை திரு—கொ. சர்க்கார் எடுத்துக் கொள்ளாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது பற்றி ஆலோசனை செய்ய, தி. த. நா. காங்கிரஸ் தலைவர் எஸ். முனிசாமி, தக்கலை 'லாக்கப்'பில் வைக்கப்பட்டிருக்கும் நாகர்கோவில் நகரசபைத் தலைவர் எம் டி. அனந்தராமன் எம். எல். ஏ.,—யைச் சந்தித்துப் பேசினுர்.

நகர சபை துணைத் தலைவர் தலைமையில் கூட்டத்தை நடத்துமாறும், அது சாத்தியப்படாதென்று தெரிந்தால் நிலைமையை விளக்கியும், தற்காலிகமாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கக் கோரியும் அமைச்சருக்குக் கடிதம் எழுதுமாறும் திரு அனந்தராமன் யோசனை கூறியுள்ளாராம்.

குஷ்டரோக நிவாரணத் திட்டத்திற்கு உதவி

மானியத் தொகை உயர்வு: நிலையங்கள் அதிகரிப்பு

குஷ்டரோக நிவாரண திட்டத்தை மேலும் விரிவாக்கும் நோக்குடன் மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சர் காரியாலயம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் ரூ. 14 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. இந்தத் தொகையையும் சேர்த்துக் கணக்கிடுகையில் குஷ்டரோக நிவாரண திட்டத்திற்கு மொத்தம் 30 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாம். இத்திட்டத்தின் கீழ் குஷ்டரோக நிவாரண நிலையங்களின் எண்ணிக்கையும் 10-லிருந்து 25 ஆக அதிகமாகிறது.

திருத்தியமைக்கப்பட்ட இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குஷ்டரோக நிவாரணத்திற்கான பல முற்போக்கு வேலைத் திட்டங்கள் அடங்கிய திட்டமொன்றும் சேர்க்கப்பட்டுள்ளதென்றும், அதற்காக 1954—56 ஆகிய இரண்டாண்டு காலத்தில் 16 லட்ச ரூபாய்வரை செலவிட திட்டமிடப்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது.

இத்திட்டம், குஷ்டரோக நிவாரண வேலைகளில் பெருவாரியாக 'சல்போன்' சிகிச்சை முறையைக் கையாளுவதில் ஏற்படும் விளைவுகளையும், அம்முறை, குஷ்டரோகம் பரவுவதைத் தடுப்பதில் எவ்வளவு பயன் தருகின்றது என்பதை ஆராய்ந்தறியவும் வகுக்கப்பட்டிருக்கிறதாம்.

இத்திட்டத்தின்கீழ் 10 நிவாரண நிலையங்களை அமைக்க ஏற்கனவே அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள், சென்னை, மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களில் 4 நோய் ஆராய்ச்சி—சிகிச்சை நிலையங்களும், இதர 6 நிலை நிறுவனங்களை, பீகார், பம்பாய், அஸ்ஸாம், ஒரிசா, விந்தியப் பிரதேசம், சௌராட்டிரம் ஆகிய மாநிலங்களில் நிறுவுவது எனவும் கூறப்பட்டது.

மேலும் 39 லட்ச ரூபாய் மானிய உதவித் திட்டமொன்றையும் மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சர் காரியாலயம் தயாரித்துள்ளது. அத்திட்டப்படி, க்ஷயரோகம், குஷ்டரோக நிவாரண நிறுவனங்களுக்கும், மற்றுமுள்ள சிகிச்சை நிலையங்களுக்கும் மானியத்தொகைகள் தரப்படும். அத்தகைய நிலையங்களுக்கு இவ்வாண்டில் (1954—55) ரூ. 9 லட்சம் மானியத் தொகை அளிக்கப்படும் என்றும், மீதியான தொகை 1955-56ம் ஆண்டிற்கான கணக்குகளின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுமெனவும் தெரிகிறது.

பணமும் மணமும்!

புதுடில்லி, ஜன. 5—

சாதகமான பொருளாதார நிலைகள் பின்லாந்து நாட்டில் திருமணங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளனவாம்.

சென்ற ஆண்டில், முதல் ஒன்பது மாதங்களில் 26,817 திருமணங்கள், நாட்டில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளதினுல் நிகழ்ந்தன எனவாம்.

கடந்த ஆண்டு அதே காலத்தில் நடைபெற்றதைக் காட்டிலும், 832 திருமணங்கள் அதிகம்நடைபெற்றிருக்கின்றனவாம்.

கடந்த ஆண்டின் இறுதி மூன்று மாதங்களிலும் இன்னும் அதிகமான திருமணங்கள் நிகழ்ந்திருக்கக் கூடும் என்றும் யூகிக்கப்படுகிறது.

****

மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

மதுரை ஆரப்பாளையம் ஞானஒளிவுபுரத்தில் அமைந்துள்ள சௌந்திரபாண்டியனுர் பந்தலில் நடைபெறும்

8—1—55 சனி:	9—1—55 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: சத்தியவாணிமுத்து	தலைவர்: மு. கருணாநிதி
திறப்பாளர்: தில்லை வில்லாளன்	திறப்பாளர்: எம்.பி.சுப்பிரமணியம், M.L.A.

இரு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணுதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், காஞ்சி கல்யாணசுந்தரம், க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, கி. மனேகரன், அ. பொன்னம்பலனுர், கண்ணதாசன், டி. கே. சீனிவாசன், ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அரங்கண்ணல், கே. வி. கே. சாமி, தங்கப்பழம், இளம்வழுதி, வி. எம். ஜான், இளமுருகனுர், கே. ஆர். ராமசாமி, எம். எஸ். ராமசாமி, சுரதா, தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை ஆகியோர் கலந்துகொள்வார்கள்

8—1—55 இரவு 10½ மணிக்கு	9—1—55 இரவு 10½ மணிக்கு	இரு நாட்களிலும்
எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்	எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும்	நாகூர் அனிபா, பி. எஸ். செல்வா
'சந்திரமோகன்'	'ஆசை நினைவு'	இசை நிகழ்ச்சிகள்

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம்: (நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி ரூ. 2; பார்வையாளர் ரூ. 1; பெண்களுக்கு அணு 8

—வரவேற்புக் குழுவினர்

****

மைசூர் மின்சாரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

முதலமைச்சர் அனுமந்தையா தரும் தகவல்

கோலார் தங்கவயல் காங்கிரஸ் கமிட்டியினர் தனக்களித்த வரவேற்பு ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா, **"ஒரு குடியரசின் கீழ், சமூகத்தின் எல்லா வகுப்பினரும் சமமாக நடத்தப்பட வேண்டும்,"** என்று கூறினார்.

மைசூரில் தற்போது நடைபெறும் மின்சார இலாகா ஊழியர்கள் வேலை நிறுத்தம் பற்றிப் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"இப்பிரச்சினை பற்றி சிந்திக்கும்போது மின்சார இலாகாவில் உள்ளவர்களுக்கு வசதிகள் கிடைக்கின்றனவா என்பதை நாம் யோசிக்க வேண்டும்; அதை எண்ணினால் தொல்லைக்கு இடமேதும் கிடையாது.

மின்சார இலாகா ஊழியர்களுக்கு இலவசமாக தண்ணீர், குடியிருப்பு வீடுகள், மின்சாரம் ஆகியவைகள் கிடைக்கின்றன; இதன் மூலம், மாதம் ஒன்றுக்கு அவர்கள் ரூ. 50 வரை சம்பளம் இல்லாத பயன் அடைகின்றனர்.

அத்துடன் அவர்கள், மற்றவர்களைப்போல் இல்லாது, ஆண்டு ஒன்றுக்கு 80 நாட்கள் குறைந்தே வேலை செய்கின்றனர்.

இப்போது மின்சார இலாகா ஊழியர்களின் கோரிக்கையை ஒப்புக்கொள்வதென்றால், சர்க்காருக்கு இதன் மூலம் ஆண்டுதோறும் ரூ. 50,00,000 அதிகச் செலவு ஆகும்; இப்பணத்தை எங்கிருந்து பெறுவதென்பதுதான் பிரச்சினையாகும்.

சென்ற ஆண்டில், ஓட்டல்களுக்கு வரி விதிப்பதென்றும், நிலவரியை சிறிதளவு உயர்த்துவதென்றும் கொண்டுவந்த எனது பிரரேபணைகளை சட்டசபை தோற்கடித்துவிட்டது.

எல்லோருக்கும் நீதி கிடைக்கும் முறையில் நடப்பதென்றால், கிராமப் பள்ளி ஆசிரியர்கள், போலீசார், கிராம மக்கள், என். ஜி. ஓ-க்கள் போன்றோரின் தேவைகளையும் கவனிக்க வேண்டும்.

பம்பாயிலும், சென்னையிலும் உள்ள மின்சார இலாகா ஊழியர்கள் மைசூரில் உள்ளவர்களைவிட அதிகம் வசதிகள் பெறுகின்றனர் என்று விவாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் சம்பள விகிதத்தைப் பொறுத்துத்தான் இப்பிரச்சினை இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள், மாதம் ஒன்றுக்கு ரூ 4,000 பெறுகின்றனர்; மைசூரில் அவர்களுக்கு ரூ. 2,000 தான் கொடுக்கப்படுகிறது.

சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவருக்கு ரூ. 4,000 தரப்படுகிறது; மைசூரில் அதே பதவி வகிப்பவருக்கு ரூ. 2,000 தான் கிறது.

சென்னை, பம்பாயிலுள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கு ரூ. 3,000 வரை கிடைக்கிறது; மைசூரில் அவர்கள் ரூ. 1,500-க்கு மேல் பெற இயலாது.

...சூர் திவான் மாதம் ரூ. 5000 பெற்றுக்கொண்டிருந்தார்; இப்போது முதலமைச்சருக்கு ரூ. 900 தான் கொடுக்கப்படுகிறது.

உயர்தர பதவியிலுள்ள அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்ட உவமைகள், குறைந்த சம்பளமுள்ள பதவிகளுக்கும் பொருந்தும்; ஆகவே, மின்சார இலாகா ஊழியர்கள், அவர்கள் தலைவர்கள் என்ன சொல்கின்றார்களோ அதை அப்படியே பின்பற்றாமல், தங்கள் மனச்சாட்சியுடன் எதையும் விவாதித்துப் பார்க்கவேண்டும்.

அத்துடன் மட்டுமின்றி, நாட்டிலே 80 சத விகிதத்திற்குமேல் மின்சாரம் உபயோகிக்கும் மக்களின் நலனையும் சர்க்கார் கவனிக்க வேண்டும்."

இறுதியாக அவர் பேசுகையில், "சர்க்கார் மின்சார இலாகா ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை சட்டசபையில் வைக்க இருக்கிறது; பிப்ரவரி 19-ந் தேதி சட்டசபை கூடுகிறது; சர்க்காரும், ஊழியர்களும் சட்டசபையின் முடிவிற்குக் கட்டுப்படுவோம்."

ஆகவே, வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறும், இப்பிரச்சினைக்கு முடிவு காண இன்னும் ஒன்றரை மாதங்களே இருக்கின்றனவென்றும், ஆகவே அதுவரை காத்திருக்குமாறும் மின்சார இலாகா ஊழியர்களை அனுமந்தையா கேட்டுக்கொண்டார்.

* * *

வேலை நிறுத்த நிலைமை

ஜன. 5-ந் தேதி காலை, பெங்களூர் நகரில் விதிக்கப்பட்டிருக்கின்ற தடை உத்தரவை மீறி, ஊர்வலம் நடத்த முயன்றதாக இரண்டு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தபோதிலும், தற்போது வேலைக்கு வந்து செல்வோரின் தொகை வேண்டிய அளவுக்கு உயர்ந்து கொண்டேதான் இருக்கிறது என்றும், கடந்த 3 தினங்களாக மாநிலத்தில் எந்த இடத்திலும் மின்சார வினியோகம் தடைபடவில்லை என்றும் மின்சார இலாகா அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆனால், மின்சாரத் தொழிலாளர் சங்கத் தலைவரோ, தொழிலாளரில் 85 சத விகிதத்தினருக்கு மேற்பட்டவர்கள் இன்னும் வேலை நிறுத்தத்திலீடுபட்டுக்கொண்டு தானிருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்.

உலக சமாதானத்தின் இருப்பிடம்

கொத்தலாவலை கண்டுபிடிப்பு

"அணு குண்டுகளும் துப்பாக்கிகளும் உலக சமாதானத்துக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகாது; மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தில்தான் சமாதானத்தின் உண்மையான பாதுகாப்பு இருக்கிறது."

இவ்வாறு, இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை, இலங்கையில் அளிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

* * *

'மாற்று' காண்கிறார்!

"'பொது வேலைநிறுத்தம் செய்துதான் தீருவோம்' என்று பிடிவாதம் செய்தால், இலங்கைத் தேயிலைத் தோட்டங்களிலே அனாவசியமாக இரத்தம் சிந்த நேரிடும்,"

என்று, இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்டார்

பம்பாய் நகருக்கு பத்து கல் தொலைவிலுள்ள ஆட்டுத் தொட்டி ஒன்றின் வெளிப்புறத்தில் சத்தியாக்கிரகம் செய்த 'ராம ராஜ்ய பரிஷத்' தலைவர் கர்பத்ரி மகாராஜ் என்பவர் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

பின்தங்கிய வகுப்பு மாணவருக்கு

உபகாரச் சம்பளம்

சென்னை, ஜன. 4—

பின்தங்கிய வகுப்பு மாணவருக்கு உபகாரச் சம்பளம் அனுமதிக்கு முன்னர், அவர்கள் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்திவிட வேண்டுமென்று வற்புறுத்தாமல் பள்ளியில் அனுமதிக்க தொழில் கல்லூரி, கலைக் கல்லூரித் தலைவர்களுக்கு அதிகாரமளிப்பது பற்றிய விஷயங்களை சென்னை சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

பின்தங்கிய வகுப்பினருக்கு துரிதமாக உபகாரச் சம்பளத்தை அளிக்க வேண்டுமெனவும் சர்க்கார் கட்டளையிட்டுள்ளதாம். இன்னும் இவைபோன்ற பல வசதிகளும் செய்து கொடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

ஆனால் சர்க்கார், உபகாரச் சம்பளத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகம் வழங்காது எனவும், உபகாரச் சம்பளத்துக்காக விண்ணப்பித்துக் கொள்ளும் எல்லா பின்தங்கிய வகுப்பு மாணவருக்கும் அவ்வுதவி அளிக்கப்படாமல், தகுதியுடையவர்கட்கு மட்டும்தான் அளிக்கப்படுமெனவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

கூட்டுறவு முறையில் கைத்தறி ஆலை

கைத்தறி நெசவாளர்களுக்கான தொழில் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு திறப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி தந்துள்ளதாம். இது கூட்டுறவு முறையில் கைத்தொழில்களை வளர்ப்பது என்ற அடிப்படையில் இயங்குமாம்.

இதன் கீழ் சென்னை மாநிலத்தில் வடமலபார் பகுதியில் இரண்டு கைத்தறி நெசவு ஆலைகள் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஒழிப்பும்—இணைப்பும்

பல மாநிலங்களுக்கான மத்திய அரசாங்கத்தின் தனி இலாகா வரும் ஜனவரி 10-ந் தேதி முதல் ஒழிக்கப்பட்டு, உள்நாட்டு இலாகாவுடன் இணைக்கப்பட்டுவிடும் என்று தெரிகிறது.

புதியதாக சேர்க்கப்பட்டுள்ள பண்டித வல்லப பந்த் உள்நாட்டிலாகா அமைச்சராகவும், டாக்டர் கட்ஜு பாதுகாப்பு இலாக்கா அமைச்சராகவும் பொறுப்பேற்பர் எனத் தெரிகிறது.

புதிய எண்ணெய்க் கிணறுகள்

ஜகார்தா, ஜன. 6—

பிலிப்பைன்ஸ், திமோர் ஆகிய தீவுகளுக்கிடையில் உள்ள சிறு சிறு தீவுத் திட்டுகளான தென் மொலுக்கஸ் என்ற இடத்தில் புதிய எண்ணெய்க் கிணறுகளிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். இந்தப் பகுதியிலேயே அந்தத் திட்டுத்தான் எண்ணெய் கிடைக்கும் மிக வளமான பகுதியாம்.

நஷ்ட ஈடு

அமெரிக்கா நடத்திய நீர்வளிக் குண்டு பரிசோதனைகளால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்ய, அமெரிக்கா, ஜப்பானுக்கு 20 லட்சம் டாலர் கொடுக்கச் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

சமீப காலத்தில், மாநில அரசாங்க பிரதிநிதிகளும், மத்திய மந்திரி காரியாலய பிரதிநிதிகளும் கூடிய மாநாட்டில், உல்லாச சுற்றுப்பிரயாண அபிவிருத்திக்காக, வகுக்கப்பட்ட குறுகிய காலத்திட்டத்தை, நிறைவேற்றி வைக்க 4 கோடி ரூபாய் செலவாகும்.

குனியமுத்தூரில் திராவிடர் திருநாள்

15—1—55 அன்று, குனியமுத்தூர் தி. மு. கழகத்தின் சார்பில் திராவிடர் திருநாள் சிறந்த முறையில் நடத்த ஆவன செய்து வருகிறது.

அன்று காலை பேச்சுப் போட்டியும், இசைப் போட்டியும் நடைபெறும். மாலை தோழர் ப. உ. சண்முகம் பேசுவார். இரவு 10 மணிக்கு கூத்தும் நடைபெறும்.

போட்டியில் கலந்துகொள்ளும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதியோ, நேரிலோ 13—1—1955-க்குள் பதிவு செய்துகொள்ளவும். முகவரி: தங்கமாணிக்கம், செயலாளர், தி. மு. கழகம், குனியமுத்தூர்.

கும்மிடிப்பூண்டி தி. மு. கழக பொதுக் குழு உறுப்பினர்கட்கு

8-1-55 பிற்பகல் 3 மணியளவில், கும்மிடிப்பூண்டி தி. மு. க. பொதுக் குழு கூட்டம் கழக கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது கழக 3-வது ஆண்டு நிறைவு விழா வரவு-செலவு கணக்கைப் பற்றிய தீர்மானங்கள் கொண்டுவரப்படும்.

தோழர் எஸ். நடராசன் சுற்றுப்பயணம்

ஜன. 7: ஆவரங்காடு (தி.மு.க. பொதுக்கூட்டம்)
„ 8, 9: மதுரை மாநாடு
„ 10: சிவகளை (நெல்லை மாவட்டம்) கழகத் துவக்க விழா

கோரிக்கை நிராகரிப்பு

லண்டன், ஜன. 5—

பிரிட்டனில், இந்தியா, ஜப்பான் துணி இறக்குமதிகளைக் குறைக்க சர்க்கார் உத்திரவிட வேண்டுமென்ற கோரிக்கையை பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சர் நிராகரித்துவிட்டதோடு, அந்நிய நாட்டு துணி இறக்குமதியைக் குறைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமென்று தம்மால் உறுதி சொல்லமுடியாது என்றும் தெரிவித்துவிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் துணி ஆலைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் 24 பேரடங்கிய குழு ஒன்று, பிரிட்டிஷ் துணிகளைவிட இந்திய, ஜப்பானிய துணிகள் குறைந்த விலையில் விற்கப்படுவதால் பிரிட்டிஷ் துணித் தொழிலில் வேலையின்மை அதிகரித்து வருவதாக எடுத்துக் காட்டி, அக்கோரிக்கையை அமைச்சரிடம் தந்தார்களாம்.

'அமைச்சரது பதில் ஏமாற்றத்தைத்தான் அளித்திருக்கிறது,' என்று அக்குழுவினர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

'சந்தர்ப்ப சூழ்நிலை' திருப்திகரமாம்

புதுடில்லி, ஜன. 5—

"இந்தியாவில் ஒரு புதிய எஃகுத் தொழிற்சாலை அமைப்பதில் பிரிட்டனது உதவியை இந்தியா ஏற்றுக்கொள்ளலாமென்பதற்கு அறிகுறியான சந்தர்ப்ப சூழ்நிலைகள் மிகவும் திருப்திகரமானதாகவே காணப்படுகின்றன," என்று பிரிட்டிஷ் உதவி வர்த்தக அமைச்சர் கூறியிருக்கிறார்.

"தற்போது மேற்கொள்ளப்படவிருக்கின்ற எஃகு ஆலையின் மதிப்பு $4\frac{1}{2}$ கோடி பவுன் — அதாவது, $59\frac{1}{2}$ கோடி ரூபாய் ஆகுமா?" என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அவர், அந்தத் தொகை, முன்னர் கூறப்பட்ட ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் மதிப்பு என்றும், இப்போது அதைவிடுத்து மாற்றுத் திட்டம் ஒன்று யோசிக்கப்பட்டு வருகிறதென்றும் கூறியிருக்கிறார்.

(முன்னர் வந்த செய்தியை 3-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் வாழ்த்து
★
திராவிடத் தலைவர்களின் எழிலுருவங்களுடனும், கண்ணைப் பறிக்கும் அழகிய முகப்புடனும், பல வித இயற்கைக் காட்சிகளும் கொண்ட பொங்கல் வாழ்த்துகள் கிடைக்கும்
★
விபரங்களுக்கு:
சாந்தி வெளியீடு
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி

சந்தித்தனர்

ஐ. நா. சபையின் செயலாளரான ஹாமர்ஸ்க்ஜோயெல்ட், பீகிங் வந்து சேர்ந்து, சீனப் பிரதமர் சௌ-என்-லாயைச் சந்தித்துப் பேசினார்.

சீன சர்க்கார் சிறைவைத்திருக்கும் 11 அமெரிக்க விமானிகளை விடுவிப்பதற்காகவே அவர் பீகிங் வந்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை முறிவு!

ஜப்பானிய சர்க்கார் அதிகாரிகளுடன் அமெரிக்க இராணுவக் காரியாலயத் தலைவர் நடத்திவந்த பேச்சுவார்த்தைகள் திடீரென முறிந்துவிட்டனவாம். தற்போது ஜப்பானில் இருந்துவரும் 'காபந்து' சர்க்கார் இந்த நிதி ஆண்டில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

அவர் 'சிபாரிசு' அரங்கேறுமா?

சட்டசபை (கீழ்)க் கூட்டத்தின் போது, தமது கட்சி சர்க்கார் தோற்றுவிட்டால், சட்டசபையைக் கலைத்துவிட்டு, மறுதேர்தல் நடத்துமாறு ராஜப் பிரமுகரைக் கேட்டுக்கொண்டு சிபாரிசு செய்யப் போவதாக திரு — கொச்சி முதலமைச்சர் பட்டம் தாணு பம்பாயில் கூறியிருக்கிறார். திரு-கொச்சியில், காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நீக்கப்படமாட்டார்கள்

சென்னை, ஜன. 5—

மதுவிலக்கு சட்ட அமுல், போலீஸ் இலாகாவினரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் கலால் இலாகா சிப்பந்திகளோ, அதிகாரிகளோ யாரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிடமாட்டார்கள் என்றும் கூடுமான வரையில் அவர்களுக்கு வேறு வேலைகள் கொடுக்க முயற்சி எடுக்கப்படுமெனவும், அவர்களில் பலர் போலீஸ் இலாகாவிலேயே சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் மதுவிலக்கு அமைச்சர் பரமேசுவரன் கூறியிருக்கிறார்.

பஞ்சாயத்துப் போர்டு தலைவர் தேர்தல்

3—1—55ல் நடைபெற்ற டி. வி. புத்தூர் (விருத்தாசலம் வட்டம்) பஞ்சாயத்து போர்டு தேர்தலில் தோழர் வி. எஸ். சண்முகம் 127 ஓட்டுகள் அதிகமாகப் பெற்று தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,

கைத்தறி துணியை வீதிதோறும் விற்போம்!